சிவமயம்

REGISTERED AS A
NEWS PAPER IN
CEYLON
P. M. G. No. H. A.
19/300 of 1939

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணி மாதம்
28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஹூ தை மீ கo உ (1948 ஜனவரி 23 வெள்ளிக்கிழமை) [இல அo

# கடவுள் உண்மை

சா. முனிசாமிப்பிள்ளை

வேனிற்காலத்தில் மந்தமாருதம் வீசுதலும், இளவேனில் முதுவேனில் முதலிய காலங்களில் புஷ்பங்கள் மலர்தலும், ஓயாது கடல் அலைத்தலும், வானத்தில் நட்சத்திரங்கள் பரந்து நிறைந்திருத்தலும் சூரியனும் சந்திரனும் ஒவ்வொரு நாளும் தவறாது உதித்தலும், மனிதன சலியாது முயன்றும் செயல்கள் சாதிக்கமுடியாமற் போதலும், எதிர்பாராது தன்னிச்சையாய்ச் சம்பவங்கள் நிகழ்தலும் இன்னும் இவற்றைப்போன்ற பலவும் எல்லாம் வல்ல இறைவன் ஒருவன் உளன் என்பதை வற்புறுத்திக் காட்டுகின்றனவல்லவா? பண்டைக்காலம் முதல் மனிதர் எழுத்துக்களை உண்டாக்குவதற்கு முந்தியே கடவுளை வழிபட்டு வந்தனர். வேதம் முன்னாளில் மனிதர் கடவுளைத் துதித்த பாமாலையே யல்லவா? "இவ்வாறு எல்லாராலும வணங்கப்படும் இறைவன் யாண்டுளன்? நீர் எமக்குக் காண்பியும்" என்று ஒருவன் கேட்டால், அவனுக்குப் பிரத்தியக்ஷ பூர்வமாய் ஈசனைக் காட்டல் இயலாத காரியமாம். அப்படியும் ஒருவன் கடவுளைக் காட்ட முயல்வானாகில் அது கடலை ஒரு கமண்டலத்தில் அடக்க முயல்வதையொக்கும். சர்வ வியாபியாயும் ஜீவாதாரனுமுள்ள ஈசன் ஆதிமத்தியாந்தாகிதன்.

ஆங்கிலப் புலவர்களிற் சிறந்த ஷேக்ஸ்பியரும் "மேல்நாட்டார் வேதபுத்தகமாகும் விவிலியநூலும் (Bible) "இயற்கைப் பொருள்கள் கடவுள் பெருமையைத் தெரிவிக்கின்றன என்று பன்முறையும் கூறுகின்றன" என்கின்றன.

சிற்றறிவுடைய மாந்தர் கடவுளுடைய உண்மை நிலைமையை யறிய முடியாது திகைப்பாராயின், அது கடவுளுடைய குற்றம் ஆகாது. மக்களிடம் கடவுள் மிக்க கருணை வாய்ந்துள்ளார். அவர் மக்களுக்கே பகுத்தறியும் தன்மை கொடுத்துள்ளார். அந்த அறிவை மக்கள் நல்ல வழியில் உபயோகிக்கவேண்டியது. நல்ல உளி யொன்றை ஒரு தச்சனிடம் கொடுத்தால், அவன் அதைக்கொண்டு தனது தொழிலாகிய மரங்களை வெட்டாமல் தன் கையை வெட்டிக்கொண்டால் அது யார் குற்றம்? அவ்வாறு செய்வது தச்சனுடைய புத்தியீனமேயல்லவா? மானிடராகப் பிறந்தார் கடவுளுடைய உண்மை நிலையை யறியவில்லை என்றால், கடவுள் அவர்களுக்குக் கொடுத்துள்ள அறிவை அவர்கள் நல்ல வழியில் செலுத்தவில்லை என்பது திண்ணம்.

பல பொருள்கள் காலம் செல்லச் செல்ல உருவத்தில் மாறுகின்றன. பழக்க வழக்கங்களும் வித்தியாசமடைகின்றன. கணக்கில்லாத புதிய பொருள்கள் வந்து குவிகின்றன. இவ்வாறுண்டாகும் மாறுதல்கள், பொருள்களின் முன்னிலையையும, அவைகள் தற்காலம் அடைந்துள்ள நிலைமையையும், அவ்வாறு மாறுதல் அடைவதற்குரிய காரணங்களையும் மறைத்து விடுகின்றன. "இது சம்பவித்திருக்கவேண்டும்" என்று அறிவினால் அறியக்கூடாத விசித்திரங்கள் எத்தனையோ உண்டாயிருக்கின்றன. பூத பௌதிக சாஸ்திரங்களில் இப்பொழுதுள்ள புதிய பொருள்கள் உண்டாகக் கூடுமென்று பதினேழாம் நூற்றாண்டில் ஒருவனும் எதிர்பார்த்திரான். சிருஷ்டிக்கப்பட்ட இயற்கைப் பொருள்களின் நிலைமையே இதுவெனில் இவற்றிற்குக் காரணமாயுள்ள கடவுளை அறிதல் எளிதோ? ஒவ்வொருநாளும் கையாளும் பொருள்களின் குணகுணங்களைக் கண்டறிய முடியாதவன் மனம் வாக்குக் காயங்களுக்கு எட்டாத ஈசன் நிலைமையைக் கண்டறிவது எப்படி?

'இத்தகைய வடிவத்தை யுடையவர், இத்தகைய குணங்களை யுடையவர்' என்று அறியக்கூடாத ஒரு கடவுளை, உண்டென்று நாம் ஏன் கருதவேண்டும்? இவ்வாறு கருதுவதுவே மனக்குழப்பத்திற்கே காரணமன்றோ? மனதைக் கவரும் அழகினையும் நறுமணத்தையும் உடைய ஒரு பூவைக் கண்டால், அது பிறத்தற்குரிய காரணமாகிய செடியையும், அது வளர்ந்திருக்கும் நிலத்தையும் ஒருவன் தன்னையும் அறியாமலே உண்டென்று கருதுகிறான். அதைப்போலவே உலகத்திலுள்ள ஜீவராசிகளையும், அவைகளின் செயல் முதலியவற்றையும் நன்றாக ஆராய்ந்து பார்க்கும்போது ஈசன் ஒருவன் உண்டென்றுதோன்றுகிறதல்லவா? மேலும் நம் முன்னோர் எல்லாரும் கடவுள் ஒருவர் உண்டென்று கருதியிருந்தனர். உலகிலுள்ள எல்லா மதங்களும் இக்கருத்தை ஒப்புக்கொள்ளுகின்றன. சிலர், கடவுள் ஒருவரென்றும், சிலர் கடவுளர் பலரென்றும் கருதியதாகத் தெரியப்படுகிறது. கவனித்துப் பார்த்தால் எல்லா மதத்தினரும கடவுள் ஒருவரென்றே முடிவில் முறையிடுகின்றனர். அறிவிற் சிறந்த ஔவையும், "தெய்வம் ஒருவனே யென்று உணரவல்லீரேல்" என்றனர். அவர் கூறியது சற்று யோசிக்கற்பாலது. 'கடவுள் ஒருவரென்று அறிவது கடினம். அவ்வாறு கண்டவன் மனத்தூய்மையுள்ளவன் என்று கூறுகின்றார்.

சராசரப் பொருள்களின் தன்மையால் மக்கள், கடவுள் ஒருவர் உண்டென்று கதினரென்றும், அந்தக் கடவுள் தன்மையை அவர்கள் முற்றிலும் அறியாவிடினும வணங்கினார்களென்றும் சொன்னோம். இனி, அவர்கள் எவ்வாறு வணங்கினார்கள்' என்பதைக் கவனிப்போம்.

இந்துக்கள் பல தேவதைகளை வணங்குகின்றார்களென்றும், விக்கிரஹாராதனை செய்கிறார்களென்றும் 'புத்தியீனர்' சிலர் ஏளனம் செய்கின்றனர். [illegible] கடவுளுடைய நிலையைச் சகுணநிற்குண வாயிலாக மக்களுக்குப் போதிக்க இந்தியாவில் பல பெரியோர் முயன்றதுபோல் வேறெந்தநாட்டிலும் முயன்றதாகத் தெரியவில்லை. சிறு வகுப்புக்களில் படிக்கும் சிறுவர்களுக்குக் கணிதம் கற்பிக்கும்போது சிறு கற்களும் மணிகளும் வேண்டியவைகளா யிருக்கின்றன. ஒன்றிரண்டு ஆண்டுகள் சழிந்த பிறகு அந்தச் சிறுவன் கணிதம் கற்கும்போதும் அப்பியசிக்கும் அந்தக் கற்களையும் மணிகளையும் நினைக்கின்றார் அல்ல. பழக்கத்தாலும், அறிவின் தேர்ச்சியாலும் பொருள்களை எளிதில் கண்டறிகின்றனர். தேவாராதனை [illegible] மனத்தை ஒருநிலைப்படுத்தச் சங்கீதம் எப்படி உதவுகின்றதோ அப்படியே நிற்குணனாகிய கடவுளை வழிபட விக்கிரஹாராதனை உதவுகிறது. சகுணமாக வழிபட்டுக் கடவுளிடம் ஈடுபட்டான் ஒருவன், சில நாட்களுக்குப் பிறகு கடவுளை நிற்குணமாக வணங்க, வருத்தமின்றி வழிபறிவான். அறிந்த வழியில் ஒழுகிப் பெறலரும் பேற்றைப் பெட்புடன் பெறுவான்.

அப்படியாயின் சகுணமூலமாகக் கடவுளை வணங்க மனிதன் ஏன் ஒரே வடிவத்தைக் கொள்ளப்படாது? பல வடிவங்கள் இருக்கின்றனவே என்று ஓர் ஐயம் உதிக்கலாம். பொன் என்னும் உலோகத்தைப்பற்றி ஒருவர் விவரித்துக் கூறும்போது, அதனைக்கேட்டோர், அப்பொருள் இன்னதென்று

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

கோடுத வேஞ்சிலை வடுக வேடுவர் விரவலாமை சொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண் டாறலைக்கு மிடம்
முடுகு நாறிய வடுகர்வாழ் முருகன் பூண்டிமா நகர்வாய்
இடுகுநுண்ணிடை மங்கைதன்னொடும் எத்துக்கிங்கிருந்தீரெம்பிரானிரே.

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

# சுதந்திரம்என்பது யாருக்கு?

## ஐ. தே. கட்சியினர் செய்வது நீதியா?

(V. S. இராசதுரை)

சுதந்திர இலங்கையின் புதிய பாராளுமன்றத் திறப்பு விழாவில் அரசாங்க கட்டடங்களின் மீதும் பொது ஸ்தாபனங்களின்மீதும் சிங்கக் கொடியையே தேசீயக் கொடியாகப் பறக்க விடவேண்டும் என்று பிரதமரும் அவர்கள் சகாக்களும்உத்தேசித்திருக்கும்பொழுது சிறுபான்மையோர் அதை மறுத்து இலங்கையில் வாழும் பல சாதியினருக்கும் ஒப்ப ஓர் தேசீயக் கொடியை நிர்ணயிக்கும்படி கேட்டுக் கொண்டதின் பேரில் சிங்கக்கொடி ஒரு அலங்காரக் கொடியேயல்லாமல் தேசீயக் கொடியல்லவென்று பிரதமரும்அவர் சகாக்களும் சொன்னார்கள். ஆனால் இப்போது அவர்கள்சொன்னசொல்லைக் கடைப்பிடிக்காது பின்பும் சிங்கக் கொடியையே தேசீயக் கொடியாக்குவதற்கு விரும்பிச் சில சூழ்ச்சிகளைச் செய்து வருவதாகத் தெரிய வருகிறது. நமது தாய்நாடாகிய இந்தியாவில் உள்ள முஸ்லிம் மக்கள் தங்கள் சம உரிமைக்காகப் போராடினதுமல்லாமல் சிறுபான்மையோர்க்கு உகந்தபடி தங்கள் கொடியைத் திருத்தி அமைத்தும்கொண்டார்கள். அவ்வாறே மற்றும் சுதந்திர நாடுகளும் சுதந்திரமடைந்தவுடன் தங்கள் தேசியக் கொடிகளை அந்நாட்டின் பல சாதியார்க்கும் தகுந்தபடி திருத்தி அமைத்துக்கொண்டன. ஆகையினால் எங்கள் சுதந்திர இலங்கையின் தேசீயக் கொடியைப் பல சாதியார்க்கும் ஏற்ற ஒரு தேசீயக் கொடியாகத் தயாரிக்காமல் ஒரு சாகியத்தார்க்குச் சேர்ந்த சிங்கக்கொடியைத் தேசீயக் கொடியாக்க முயற்சிப்பதற்கு ஓர் காரணமுமில்லை. ஜனாப் ஏ. சின்ன லெப்பை அவர்கள் தன்சுயநலத்தைக் கருதித் தன் சாகியத்தைமறந்து சிங்கக் கொடியையே தேசீயக் கொடியாக்க முயற்சிப்பது பெருந்தவறான காரியம். குடியைக் கெடுக்க வந்த கோடரிக் காம்புபோல் வந்துவிட்டார் இவர். இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்ததும் நாட்டில் உள்ள யாவருக்கும் சுதந்திரம் கிடைத்துவிட்டதாகச்சொன்னார்கள். ஐ. தே. கட்சி நாட்டில் உள்ள எல்லா சாதியினரையும் எல்லா வகுப்பினரையும் உயர்வு தாழ்வின்றி சமமாக ஆதரிக்கும் மனோபாவத்துடன் நிறுவப்பட்டதாகக் கூறியுள்ளார்கள். இப்பொழுது மற்றும் சாதியினரை அலட்சியம் செய்துவிட்டு சிங்கக் கொடியையே தேசீயக் கொடியாக்கவும் சிங்களத்தைத் தேசீய பாஷையாக்கவும் பௌத்தசமயத்தைப் பரப்பவும்எத்தனிப்பது முறையாகுமா? இலங்கையிலுள்ள ஒவ்வொரு பகுதியிலும் வாழும் ஒவ்வொருவர்க்கும தேசீயக் கொடியில்மட்டும் உரிமையுண்டல்ல, மற்றும் எல்லா விஷயங்களிலும் சம உரிமையுண்டு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் தங்கள் சம உரிமைகளைக் கோருவதற்குத் தயங்காமல் போராட முன்வருவார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேஷ விஞ்ஞாபனம்.

வருகிற திங்கட்கிழமை (26-1-48) நிகழும் தைப்பூச புண்ணிய தினங் காரணமாக, இந்துசாதன ஆலயம் சைவப்பிரகாச யந்திரசாலை யென்னுமித் தாபனங்களிற் கடமை யாற்றுவோர்க்கு விடுமுறைநாள் உதவப்படுதலினுல், அடுத்துவரும் செவ்வாய்க்கிழமை இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்கள் வெளிவரா என்பதை அபிமானிகட்கு விநயத்துடன் தெரிவிக்கின்றேம்.

மனேஜர்.

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துவூ
தை மீ ௧0 உ வெள்ளிக்கிழமை

## சீமேந்துத் தொழிற்சாலை

இலங்கை யரசினர் உலக இரண்டாம் யுத்தகாலத்திலே, அந்நிய நாட்டிலிருந்து இங்கு இறக்குமதிசெய்யப்படும் பொருள்கள் முட்டுப்பட்டமையையும் அதனுல் இலங்கை மக்களும் அரசினராகிய தாங்களும் பட்ட கஷ்டங்களையும் அநுபவித்த பஞ்சத்தையும் உத்தேசித்து, "பட்டாலறிவன் சண்டாளன்" என்ருங்கு, இனிமேலும் இப்படியான யுத்தம் நேருங் காலங்களில், இவ்வகையான கஷ்டங்களும் பஞ்சங்களும் நேரவிடவொண்ணுதென்னும் நோக்கங் கொண்டவர்களாய், இலங்கை மக்களின் உபயோகத்திற்கு இன்றியமையாதுள்ள பொருள்களை இங்குத்தானே ஆக்கிக் கொள்ளவேண்டுமென்றும், அதற்காகிய மூதற் காரணப் பொருள்களைத் தேடிக்கொள்ள வேண்டுமென்றும் நிச்சயித்து, இலங்கையில் இடந்தோறும் அரசினராகிய தங்கள் பொறுப்பிலே சிற்சில பொருள்களை ஆக்குதற்காகிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாயினர். இத் தொழிற்சாலைகள் விஷயமாக வுண்டாகும் பணச்செலவிற்கும் திட்டங்கள் செய்துள்ளனர். இவைகளுட்பிரதானமாக ஆக்குதற்கு உத்தேசித்திருககும் பொருள்கள் கரிஅமில வாய்வு சேர்ந்த தேங்காய் நெய்யாக்குதல், சோடா மூதலியன ஆக்குதல், புடவைநெசவுசெய்தல், இரும்புவேலை உருக்கு வேலைகள் செய்தல், காகிதம் செய்தல், சீமெந்து ஆக்குதல் என்பனவாகும்.

இலங்கையின் பலபாகங்களிலே, மேலே சொல்லப்பட்ட பொருளகளை யாக்குதற்காகிய தொழிற்சாலைகள் அமைக்கப்படும்; இவற்றுள் சீமெந்து ஆக்குதற்பொருட்டுக் காங்கேயன்றுறையிலே அமைக்கப்படும் சீமெந்துத் தொழிற்சாலையே பெரியதெனவும் சிறந்ததெனவுஞ் சொல்லலாம்; இங்கிலாந்திலிருந்து இச்சீமெந்துத் தொழிற்சாலைக்காகிய பாரிய யந்திரங்களைத் தருவித்தல் காரணமாக இடையே சிறிது கால தாமதம் ஏற்படுகிறவெனினும் இத்தொழிற்சாலையை அமைத்தலாகிய கருமம் திருப்திகரமாக நடைபெறுகின்றது; ஏனைய பொருள்களுக்காகிய தொழிற்சாலைகள் சில இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை யெனவும் தொழிற்சாலைப்பகுதி அரசினர் அறிக்கைப்பத்திரத்திற் காணக்கிடக்கின்றது. இத்தொழிற்சாலையில் 1949-ம் ஆண்டு மூற்பகுதியிற் சீமேந்து ஆக்குதலாகிய கருமந்தொடங்கப்படுமென அறிகின்றேம். இத் தொழிற்சாலை அமைத்தற்காகிய பணத்திட்டம் 850.000 ரூபாவாகும்; ஆயினும், இதற்காகிய யந்திரங்களின் விலை இக்காலத்தில் அதிகப்பட்டிருத்தலால் இத் தொகை போதியதன்றெனக் காணப்படுகிறதாம்; இத்தொழிற்சாலைவாயிலாக ஆண்டுதோறும் ஒருலட்சம் நிறைகொண்ட திறமான சீமெந்து ஆக்குதல் இயலுமாம்; மேலும் இத்தொழிற்சாலை தக்க இடத்திலே தாபிக்கப்படலாயிற்றெனவும், அயலியே சீமெந்துக்காகிய சிறந்த சுண்ணும்புக் கல் போதிய அளவு கிடக்கின்றனவென்றும் 100மைல் தூரத்திலுள்ள பெரிய குளத்திலே (Giants Tank) இதற்காகிய களிமண் எடுக்கலாகுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. இப்போதைக்கு இச்சீமெந்தோடு சேர்க்கப்பட வேண்டிய உப்புச் சத்தை (Gypsum) என்னும் பொருளை வேறு ஊரிலிருந்து இங்கே தருவிக்கவேண்டி யிருக்கிறதெனினும், காலகதியில் அப்பொருளையும், காங்கேயன்றுறையிலிருந்து 40 மைல் தூரத்திலுள்ள ஆனையிறவு உப்புப்பாத்தியிலிருந்து தருவித்தல் முடியுமெனவும் அரசாங்கதொழிற்பகுதியார் வெளியிட்டுள்ள அறிக்கையிற் குறிக்கப்பட்டிருக்கிறது.

இவைகளையெல்லாம் உத்தேசிக்குமிடத்து, இச்சீமெந்துத் தொழிற்சாலையே இலங்கையில் அரசினர் தாபிக்கத்தொடங்கிய தொழிற்சாலைகளெல்லாவற்றினும் பெரியதாகுமென்பதும், இங்குள்ள பன்னூற்றுக்கணக்கான மக்கள் இத்தொழிற்சாலையில் மேற்பார்வை உத்தியோகத்தர்களாகவும் தொழில் நிபுணர்களாகவும் பலவகையான கூலித்தொழில்களைச் செய்பவர்களாகவும் இத்தொழிற்சாலையிற் கடமையாற்றி ஊதியம் பெறலாகுமென்பதும், இது இந்நாட்டு மக்களின் வருவாய்க்குப் பல்லாற்றுலும் ஏதுவாயிருக்குமென்பதும், இதில் ஆக்கப்படும் சீமெந்து இலங்கைமக்களின் உபயோகத்திற்கு மேற்பட்டு எஞ்சுமாயின் அதனைச் சமீபத்திலேயுள்ளதாகிய இந்திய நாட்டிற்கும் வியாபாரத்தின் பொருட்டு ஏற்றுமதிசெய்யலாகுமென்பதும், இலங்கையிலுள்ள துறைமுகங்களுட் கொழும்பிற்கடுத்த சிறந்த துறைமுகமாகக் காங்கேயன்றுறையே விளங்குமென்பதும், தொழிற் பஞ்சம் இப்பொழுது குறையுமென்பதும் இன்னபிறநன்மைகள் உண்டாமென்பதும் யாழ்ப்பாண மக்களுக்கு விரைவிற் புலப்படும். சாதிமத பேதங்கள் பாராட்டாது எக்கருமமும் நன்மைக்கேயாம் என்ற பெருங் கொள்கையோடு வாழும் பிரஜைகட்கு எவ்வித குறையுமில்லையாம்.

# உலகம் பலவிதக் கதை

(மூற்றொடர்—48)

### இவையெல்லாம் திருவருட் செயலாகும்

அவன் தன் பெயரைச் சொல்லக் கேட்ட இரத்தினவல்லி அற்புதமடைந்து நாணமீதூரத் தன்காற்பெருவிரலைப் பார்த்தபடி ஒருபுறத்தொதுங்கி நின்ருள். இங்ஙனமாக, திரிலோகசஞ்சாரியாகிய நாரத முனிவர்மூலமாக இந்நிகழ்ச்சியை அறிந்து, இரத்தினவல்லியின் பிதாவாகிய வசுபூதியெனப்படுங் கந்தருவராசன் அங்கு வந்துசேர்ந்து அற்புத வயத்தனுய் நின்ருன்; இரத்தினவல்லியும் பாங்கியரும் அவனை வணங்கி விநயமாக நின்றனர்; இரத்தினவல்லி அப்பொழுது நிகழ்ந்த வரலாறு முழுவதையும் தன் பிதாவுக்குச் சொல்லும்படி தன்பாங்கியருக்குக் குறிப்பாகத்தெரிவிக்க, சந்திரலேகை யென்பாள் நடந்த செய்தி யனைத்தையுஞ் சொன்ளுள்; கேட்டவசுபூதி ஆச்சரியமடைந்தானுய் இறைவன் திருவருளைப் பாராட்டி இரத்தினசூடனுக்கு நன்றிகூறி அவனுடைய வரலாற்றைத் தனக்குச் சொல்லும்படி கேட்டான்; அப்போது இரத்தினசூடன் தன் வரலாற்றைப் பின்வருமாறு சொல்வானுயினுன்: "நான் நாகருலகத்து அரசனுடைய புதல்வன்; என்னை இரத்தினசூடன் என்று சொல்வார்கள்; காசித் தலத்திற் கோயில்கொண்டருளிய இரத்தினேஸ்வரலிங்கப் பெருமானை அநுதினமுஞ் சென்று வழிபடும் நியமம் பூண்டுளளேன்; சென்ற இரவு அந்தப் பெருமான் என் சொப்பனத்திலே தோன்றி, "அன்பனே, நாளைத்தினம் கந்தருவ கன்னியர் நால்வரை அசுரனெருவன் கவர்ந்து செல்வான்; அந்நேரத்தில் நீ அங்கே சென்று வழிமறித்து அந்த அசுரனைக் கொன்று, எம்மிடத்திற் பத்திபூண்டவர்களாகிய நான்கு கன்னியரையும் மீட்குதி எனக் கட்டளையிட்டார்; பெருமானுடைய திருவாக்கைச் சிரமேற்கொண்டு பெருமான் வெளியிட்டருளிய குறிப்பின்படி இந்த மார்க்கமாக வருமபோது, இரத்தினேஸ்வரப் பெருமானே உனக்கடைக்கலம்" என்று இப்பெண்கள் இட்ட ஓலத்தைக் கேட்டு ஓடிவந்து அக்கொடிய அசுரனைக் கொன்று இவர்களை மீட்டு எம்பெருமானுடைய ஆக்ஞையை நிறைவேற்றி நிற்கின்றேன்; இது தான் என் வரலாறு" என்று உள்ளமூருகச் சொல்லி இரத்தினேஸ்வரப் பெருமானை வழுத்தி நின்ருன்: இப்படி அவன் சொல்லக்கேட்ட வசுபூதியென்னுங் கந்தருவ மன்னன், இரத்தினசூடனும் தன குமாரியும் இரத்தினேசுவரப் பெருமான்மீது கொண்ட பத்தித் திறத்தையும் அப்பெருமான் இவர்கள்மீது வைத்துளள அருளின் திறத்தையும் எண்ணி யெண்ணிச் சிந்தையுருகி இறைவனை வழுத்தி இரத்தினசூடனை ஆர்வத்துடன நோக்கி "நாகருலகத்து அரசிளங் குமரனே! இவை யெல்லாம் திருவருட் செயலாகும்; இந்த இரத்தினவல்லியென்பவள் என்புதல்வி, இங்கு நிற்கும் மற்றை மூவரும் இவளுடைய பாங்கியர்; இவர்களையும நான் பெற்ற மக்களாகவே பாவித்து வருகிறேன்; இந் நால்வரும் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தறியார்கள்; அந்தக் கொடிய அசுரனிடமிருந்து இந்நால்வரையும் மீட்டு இவர்களுடைய மானத்தைக் காத்தமையினுல் இந்நால்வரும் உனக்கே மனைவியாதற் குரியர்; திருவருட் செயலும் இப்படியென்றுதான் எண்ணுகிறேன்: ஆதலினுல் திருவருட் சம்மதப்படி, நீ இப்பொழுது என் மாளிகைக்கு வந்து இந்நால்வரையும் முறைப்படி மணஞ்செய்து ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்" என்ருன்; இரத்தினசூடனும் "இதுவும் திருவருட்செயல்" எனத் தன்னுள்ளத்தில் மதித்து அதற்கு உடன்படுதலும், வசுபூதி தன் புதல்வியர் நால்வரையும் இரத்தினசூடனையும் தன் மாளிகைக்கு அழைத்துச் சென்று அங்குள்ளாரனைவர்க்கும் தைவிகமாகவுள்ள இந்த வரலாறு முழுவதையுஞ் சொல்லி முறைப்படி அந்நான்கு கன்னியரையும் இரத்தினசூடனுக்குத் தாரதத்தஞ் செய்து, தன் தகுதிக்கேற்ப மருமகனுக்குப் பல வரிசைகள் சன்மானங்களையெல்லாங் கொடுத்தான். இரத்தினசூடன் அப்பெண்களுடன் சில நாள் அங்கிருந்து வாழ்ந்து பின்னர் தன் மாமன் முதலானேரிடம் விடைபெற்றுக்கொண்டு தன் தேவியருடன் காசிக்குச் சென்று கங்கையில் மூழ்கி இரத்தினேசுவரப்பெருமானை வணங்கி, அப்பெருமானுடைய அருளைப்பெற்றுத் தன்னுலகத்தை யடைந்து அங்கே தனது தந்தை தாய் முதலானோர் தன்னையும் தன் தேவியரையும் ஆதரவோடு உபசரித்து இனிது வழ்ாந்தான்" என்று புரோகிதர் இரத்தினவல்லியின் கதையைக கண்ணகியம்மை முதலானேர்க்கு எடுத்துக் கூறிவிட்டுச் சிவபாக்கியத்தின் சாதகத்தை அவதானமாகக் கணித்துப் பார்த்தார்.

### "ஆங்காலம் மெய்வருந்தவேண்டா"

அரைமணிவரை புரோகிதர் அச்சாதகத்தை அவதானமாகக் கணித்துப் பார்த்துவிட்டுப் புன்னகையுடன் வள்ளியம்மை முதலானேரை நோக்கி "இது அதிர்ஷ்டமான சாதகம; இந்தச் சாதகத்திற்குரியவர்க்குக் காசி யாத்திரை செய்யவேண்டுமென்ற பலன் இருக்கிறதெனினும், இப்போதைக்கு அப்படியான பலனில்லை; மேலும் கன்னியாகக் காசி யாத்திரை செய்தலின்றி, இன்னும் ஓராண்டு கழித்துச் சதிபதிகளாகவே காசி முதலாந் தலங்களுக்குங் கங்கை முதலாம் புண்ணிய தீர்த்தங்களுக்கும யாத்திரை செய்யும் பலனுண்டு; இனி, இச் சாதகருக்கு வெகு சீக்கிரத்தில் விவாகம் நிறைவேறவேண்டி யிருக்கிறது; இந்தச் சமயந் தப்பினுல, பின்னர் இப்போதைக்கு விவாகமில்லையாகும் .... ...." என்று சொல்வதற்கிடையில கண்ணகியம்மை புரோகிதரை நோக்கி, "சுவாமி, இப்போதைக்கு அப்படியான சுபகருமம் ஏதும நடப்பதாகக் காணவில்லை யென்பதுதான எங்களுக்குத் தீராக்கவலை; அப்படி நிறைவேறுவதானுல்? மாப்பிள்ளை? சொந்தத்துள்ளோ, புறத்தியோ, எந்தத் திக்கிலிருந்து பேச்சுக்கால் வரும" என்று ஆவலுடன் வினுவ, புரோகிதர் "சொந்தமென்ன, புறத்தியென்ன திக்கென்ன இந்தச் சாதகருக்குச் சொந்தத்துட் சிறுபிராயந் தொட்டே ஒருவரை நிச்சயித்திருக்கிறீர்கள்; இந்தப் பெண்ணுக்கும் தான் அந்த வரனையே கணவனுக அடைய வண்டுமென்ற வைராக்கியம் உண்டு; அப்படியே அந்த வரனுக்கும் இக்கன்னிகையை யல்லாது வேறு எவரையும் மணஞ்செய்வதில்லையென்ற பிடிவாதமுண்டு, இவர்களிருவரும் ஒருவரை யொருவர்

தொடர்ச்சி 5 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருச்சி ரேடியோ

சனி ஜனவரி 24

காலை 7 15 கீதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 கமலா பாகீரதி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 கும்பகோணம் பி கிருஷ்ணசாமி வயலின் 8 30 காலை இசை இசைத்தட்டு 9 முடிவு

1 கும்பகோணம் பி கிருஷ்ணசாமி வயலின் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2 05 சர்வகலாசாலைக் குறிப்பு 2 15 கமலா பாகீரதி பாட்டு 2 45 ஒலிபரப்பு முடிவு

மாலை 5 எஸ் எம் அஹமத் பாட்டு 5 30 கே எஸ் நாராயண ஐயங்கார் கோட்டுவாத்தியம் இசைத்தட்டு 5 40 பொய்கையார் பாசுரவிளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 நூல்வகை இசைத்தட்டு 7 15 ஈத் இ மிலாத் பேச்சு 7 30 தமிழில் செய்திகள் 7 45 எஸ் பிஞகபாணிபாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வாணிலை 9 45 கே எஸ் சுமதி பாட்டு 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.

ஞாயிறு ஜனவரி 25

காலை 7 15 கீதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 கும்பகோணம் வி பக்கிரிசாமி பாட்டு 8 ஆங்கிலத்திலசெய்திகள் 8 15 காலை இசை (இசைத்தட்டு) 8 30 வீ ஆர் சாரதா வீணை 9 முடிவு.

12 கதம்பம் இசைத்தட்டு 12 30 சொந்தக் கற்பனை நாடகம் 12 40 ஸ்வநாதவிநோதினி புதிய மெட்டு 12 45 நூறுக்கு விசாரணை 12 50 அசிரம் இசை நிகழ்ச்சி 1 மணிமலர் 1 30 ஆங்லத்தில் செய்திகள் 1 40 கல்லிடைக் குறிச்சி வ பாலசுப்பிரமணிய பாகவதர் ஒலிப்பதிவு 2 தமிழில் செய்திகள் 2 05 பெண்ணுலகம் 2 50 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 3 ஒலிபரப்புமுடிவு.

மாலை 5 கும்பகோணம் வி பக்கிரிசாமி பாட்டு 5 40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 வி ஆா சாரதா 7 30 தமிழில செய்நிகள் 7 45 சினிமா விமர்சனம் 8 கும்பகோணம் பானுமதி பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வாணிலை 9 45 பியானோ கிளாரினெட் 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு,

திங்கள் ஜனவரி 26

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 எஸ எம் வல்லவரங்கம் பிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 புதிய பாடல்கள் ஆ இ ரே வித்வான்கள்தயாரிப்பு 8 30 திருக்கோடிகாவல் ஆர் கோவிந்தராஜபிள்ளை பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 கமலா நாகநாதன் வயலின் 2 தமிழில் செய்திகள் 2 05 கமலா நாகநாதன் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு

மாலை 5 எஸ் எம் வல்லவரங்கம்பிள்ளை நாகஸ்வரம் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 730 தமிழில்செய்திகள்7 45 ரேடியோ பேட்டி 8 திருக்கோடிகாவல ஆர் கோவிந்தராஜபிள்ளை பாட்டு 8 30 கமலா நாகநாதன வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 ஆங்கிலப் பேச்சு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வாணிலை 9 45 டி பி ராமகிருஷ்ணன் பாட்டு 10 இசைவேளை (இசைத்தட்டு) 10 30 முடிவு.

சேவ்வாய் ஜனவரி 27

காலை 7 15 கீதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 கே ஆர் வெங்கடாசலம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருவிழிமிழலை சகோதரர்கள் நாகஸ்வரம் இசைத்தட்டு 8 30 பாலக்காடு கே எஸ் ருக்மிணி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பாலக்காடு கே எஸ் ருக்மிணி பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 தமிழில் செய்திகள் 2 05 பாலக்காடு கே எஸ் ருக்மிணி பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 கே ஆர் வெங்கடாசலம் பாட்டு 540 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7 15 அமைச்சு திருக்குறளில் 7 30 தமிழில் செய்திகள் 7 45 கே எஸ் நாராயணசாமி ஐயர் வீணை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வாணிலை 9 45 புல்லாங்குழல் கோட்டு வாத்யம் வயலின் 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10 30 முடிவு.

புதன் ஜனவரி 28

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 காஞ்சீபுரம் வி கிட்டப்பா பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலைஇசை இசைத்தட்டு 8 30 வீ ஆர் ரங்கநாதன் புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 காஞ்சீபுரம் வி கிட்டப்பா பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 காஞ்சீபுரம் வி கிட்டப்பா பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 வி ஆர் ரங்கநாதன் புல்லாங்குழல் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராமநிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7 30 தமிழில் செய்திகள் 7 45 புதிய வெளியீடுகள் இசைத்தட்டு 8 முடிக்காத சித்திரம் நாடகம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 எம் எஸ் சுப்புலட்சுமி 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வாணிலை 9 45 டி எஸ் வெங்கடாசலம்பிள்ளை வயலின் 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு

வியாழன் ஜன 20

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 எல் என் சோமயாஜுலு பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலை இசை இசைத்தட்டு 8 30 எ லலிதா வீணை 9 முடிவு,

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2 05 அம்மானை 2 15 கல்விபரப்பு 2 45 முடிவ.

மாலை 5 எ லலிதா வீணை 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்திரகானம் இசைத்தட்டு 7 15 செய்தி விளக்கம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 தியாகராஜ உத்ஸவம் 9 ஆங்கிலத்தில செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வாணிலை 9 45 தியாகராஜ உத்ஸவம் 10 30 முடிவு.

வெள்ளி ஜன 30

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 கடலூர் டி வேலுகோபால் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருச்சி வாத்ய கோஷ்டி 8 30 தியாகராஜ உத்ஸவம் 10 ஒலிபரப்பு முடிவு.

கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 கடலூர் டி வேணுகோபால் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 கடலூர் டி வேலுகோபால் பாட்டு 2 15 கல்விஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 தியாகராஜ உத்ஸவம் 5 40 குரான்ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராமநிகழ்ச்சிகள் 7 தியாகராஜ உத்ஸவம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 நமது தபால் பெட்டி 8 தியாகராஜ உத்ஸவம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வாணிலை ஆங்கிலம் 9 45 தியாகராஜ உத்ஸவம் 10 30 முடிவு.

---

## கடவுள் உண்மை

முதலாம் பக்கத் தொடர்ச்சி

அறியத் தம் வீட்டிலுள்ள நாணயத்தினையோ, நகையினையோ மற்றும் யாதேனுமொரு பொருளினையோ நினைத்துக்கொள்ளுகிறார்கள். உலோகம்ஒன்றேயாயினும் அவர்கள் அதனையறியநினைத்தபொருள்கள்பலவாயின. அவ்வாறே கடவுள் ஒருவரேயெனினும் மனிதனுடையமனத்திற்கேற்ப வெவ்வேறு வடிவங்களுடையவரா கவும் குணங்களுடையவராகவும் கருதப்படுகிறார். எவ்வாறு ஒருவனுக்குத் தன்னிடத்திலுள்ள பொன்னுலாய பொருள்கள் அந்த லோகத்தை ஓர் ஞாபகமூட்டுகின்றனவோ அவ்வாறே ஈசன் பெருமையை மக்களுக்கு இந்த வடிவங்கள் ஓர் ஞாபகமூட்டுகின்றன. ஒலி வடிவாயுள்ள எழுத்தை வரிவடிவாயுள்ள எழுத்து எப்படி அறிவிக்கின்றதோ அப்படியே வடிவற்ற கடவுளைச் சிலை முதலிய பொருள்கள் அறிவிக்கின்றன.

(வரும்)

---


வடமராட்சி

## சைவமங்கையர் வித்தியாலய நிதி

வடமராட்சிச் சைவப் பெண்பிள்ளைகளுக்கு ஆங்கில) உயர்தரக் கல்வி தரத்தக்க ஒரு சைவ வித்தியாசாலை இல்லாமை ஒரு பெருங் குறையாக இருந்ததை நீக்குவதற்காக இவ்வித்தியாசாலை ஸ்தாபிக்கப்படடு இப்பொழுது 3 வருடங்களே ஆகின்றன. இச்சிறு காலத்திற்குள் இந்த வித்தியாயாசாலை நல்ல முன்னேற்ற மடைந்திருக்கிறது இப்போது 400 பிள்ளைகள் வரையில் இங்கு கல்வி பயிலுகின்றனர். S. S. C., மற்றிக்குலேஷன் வரையில் வகுப்புக்கள் உண்டு. இன்று, இங்கு கல்விகற்க விரும்பும் மாணவிகள் எல்லோரையும் சேர்க்க இடமில்லாதது வருந்தத்தக்கது. அன்றியும் போதிய கட்டிட வசதியும் தளபாடங்களும் விடுதி வசதியும் இல்லாமையால் இங்கு பயிலப்படும் பல பொருள்களையும் சீரிய முறையிற் கற்பிப்பதற்கு முடியவில்லை.

இப்போது அத்தியாவசியமாய் இருப்பவை: ஒரு விஞ்ஞானப் பயிற்சிச் சாலையும் தளபாடங்களும், இன்னும் 10 வகுப்புகளுக்குக் கட்டிடமும், நூல்நிலையமும் வாசிகசாலையும், குறைந்தது 150 மாணவிகள் தங்குதற்கேற்ற விடுதியும்.

இவற்றை அமைப்பதற்கு குறைந்தது ரூபா 90,000 தேவை. ஆகையால் இப்பாடசாலையின் முன்னேற்றத்தைக் கருதும் எல்லோரையும் இந்த நிதிக்கு மனமுவந்து பொருளுதவி செய்து இந்த நற்காரியத்தை நிறைவேற்றுவிக்குமாறு வேண்டுகின்றோம்.

இலங்கையிலுள்ளோர் பருத்தித்துறை திரு. ச. சோ. சரவணமுத்து அவர்களுக்கும், மலாயா தேசத்திலுள்ளோர் திரு A. தம்பையா, மலாயன் யூனியன் செக்றற்றறியாற் என்ற விலாசத்துக்கும் தங்கள் தங்கள் உபகரிப்பை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

ச. சோ. சரவணமுத்து, தனாதிகாரி — மு. ஆ. தங்கராசா, காரியதரிசி.

M 23, 30


---


குகமயம்

## ஓர் வேண்டுகோள்

அன்புடையீர்!

புண்ணிய பூமியாகிய கதிர்காம க்ஷேத்திரத்தில் கதிரமலை யென்னும் சன்னிதான 'தேஜோமயானந்த சாந்தி'' சங்கஸ்தாபனத்தை உண்டுபண்ணியவரும் அதன்பால் பலவருடங்களாக தண்ணீர்ப்பந்தல் அடிமையுநத்துடையவருமான காலஞ்சென்ற ''கண்டகோடரி சுவாமி'' என்னும் திருநாமம் விளங்கிய ஸ்ரீ ரமணசங்குசாது அடியாரின் கைங்கரியங்களைப் பின்பற்றி பல பெரும் அபிமானிகளின் ஆராதனைக்கிணங்கி சேவ்வனே இவ்வரும்பெரும் தர்ம கைங்கரியத்தை நடாத்த ஒப்புக்கோண்டவருமான அடியேன் சாது சங்கரப்பிள்ளை முருகேசு, இதேவித அடிமைகளை சென்ற 17 வருஷக் காலமாக சேல்வக் கதிர்காம றேட்டிலும் பல இடங்களிலும் திருப்திகரமாக ஒப்பேற்றி நடாத்தி வந்தும், மேற்சோல்லிய பெரியாரின் தொண்டுகளை ஆட்சேபனையின்றி நடாத்த உரிமைபெற்று அடியேன் லோகாபிமானிகளாகிய உங்களாதரவை என் முன்னேற்றத்திற் கிணங்க எவ்வாறு முன்னும் கிரயங்கள் பெற்றும் அதற்குரிய பற்றுச்சீட்டு உரிமை அளித்தும் நடத்திவந்தேனோ அதேபோல் மேற்சோல்லிய கதிரமலை ஸ்தாபன விஷயங்களை அவ்வவ்வாறு நடத்துவேனென்றும் இத்தாற் சகலருக்கும் இவ்வறிவித்தல் மூலமாய்ப் பிரசுரம்பண்ணி அறியத் தருகிறேன்

இங்ஙனம்,

சாது ச. மு.

Mis 229 20, 27, 3-2-48.


---


## இந்துசாதனம்

### ஆங்கில - தமிழ்ப் பிரசுரங்கள்

பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். | வெளியூர். | மலாய்நாட்டுக்கு |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச |
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்.

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.


(நமது அரசியல் நிருபர் எழுதுகிறார்)

---


## காணி விற்பனவு விளம்பரம்

திருத்தப்பளையாம்பரை என்னுங்காணி 117 பரப்புக் கொண்டது. கீரிமலை—மாவிட்டபுரம் தெருவோரத்திலுள்ளது. அரசினா ''சீமைந்து''த் தொழிற்சாலைக்கு அணித்தாகவுள்ளது; வாங்குவோர் விருப்பத்திற்கிசைய முழு நிலமாகவேனும், பாகம் பாகமேனும் கொடுக்கலாகும்; வாங்கவிரும்புவோர் இந்த ஜனவரிமாசம் 25-ம் திகதிக்கிடையில் கொழும்பு 7 ரொஸ்மிட் பிளேஸ் ஸ்ரீ நமசிவாயம் அவர்களுக்குஎழுதவும்.

P. தேவசேனபதி
பிறக்றர்.

139, டாம் ஸ்ரிறீற், கொழும்பு

Mis. 223, 16—20 1-48


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் கடன் என்ன?

## நாட்டு வளர்ச்சிக்குரிய சில பணிகள்

(மு. செல்வநாயகம்)

யாழ்ப்பாணத்தில் மழையில்லையே அங்குள்ள எனது சகோதரசகோதரிகள் உணவின்றி வருந்தப்போகின்றார்களென்று நினைத்துக் கவலைப்பட ஒரு உண்மையான சகோதரன் இருப்பானாயின் மழையில்லாமையை அறிந்து ஊரெங்கும் வாடும் பயிர்களுக்கு எவ்விதத்தினாலும் நீர்ப்பாய்ச்சுவித்துக் கவலையை நீக்கிவைப்பான். சரியான தொண்டர்கள் இருப்பாரில் அவர்கள் வீடுவீடாய்ச் சென்று ஆலயங்களுக்கு நல்ல பூஜைகளைச் செய்வித்து கடவுளின் கருணை மழையைப் பெறுவதோடு நிற்காமல் எல்லோரையும் அவரவர்களின் வயல்களில் கிணறுகளைத் தோண்டும் வண்ணம் ஏவி அதிலிருந்து நீரைப் பாய்ச்சுவித்துக் கவலையை நீக்கியிருப்பர் ஒற்றுமையிருக்குமாயின் கூட்டுறவில் தோட்டமும் வயலும் செய்வதற்குத் தேவையான யந்திரங்களைத் தருவித்துக் கவலையையும் கஷ்டத்தையும் நீக்கி உன்னத நிலையையடையச் செய்திருப்பர். ஊக்கமிருக்குமாயின் பிறதேசங்களில் எத்தன்மையான பயிர்கள் பயிரிடப்படுகின்றன எவ்விதமாகப் பசளையிடப்படுகிறதென்று அறிந்துசெய்திருப்பர். தேசாபிமானம் இருக்குமாயின் ஒருவர்க்கொருவர் உதவிசெய்து எல்லோரும் ஒன்றென நினைத்துக் குறைந்த விலையில் தங்களின் பொருள்களை விற்றுச் சந்தோஷமாக ஜீவிக்கச் செய்வதன்றி நாட்டையும் உன்னத நிலை அடையச் செய்திருப்பர். நுண்ணிய புத்தியிருக்குமாயின் மற்றத் தேசத்தவர்களும் இதராசாகியத்தாரும் தங்கள் தேசத்தின் முன்னேற்றத்துக்கும் சமய அபிவிர்த்திக்கும் உழைப்பதை அறிந்து அவைகளிலும் பார்க்க விசேஷமாகச் செய்து தேசத்தையும் சமயத்தையும் ஓங்கிவளரச் செய்திருப்பர். விவேகம் இருக்குமாயின் மற்றவர்களோடு எவ்விதமாக ஊடாடி நன்மை அடையலாமென்று அறிந்து அதற்குத் தகுந்தவாறு நடப்பதற்கு எல்லோரையும் பிரசாரத்தால் ஏவி பெலன்பெற்று வாழச் செய்திருப்பர்.

1 1-48ல் சாவகச்சேரி டிரிபேர்க் கல்லூரி மண்டபத்தில் நடந்த பகிரங்கக் கூட்டத்தில் எம் பிரதிநிதிகளில் சிலர் வடமாகாணத்து மக்களுக்கு ஏதேதோ செய்யப்போகின்றோமென்று கூறியவை உண்மையாக உள்ளத்திலிருந்து உருக்கத்தினல் உதித்திருக்குமாயின் அடியில் காணும் பிரகாரம் செய்து எம்மக்கள் கவலையை நீக்கிவைப்பார்களென நம்புகின்றோம்.

1. கட்டாயப் படிப்புச் சட்டத்தைப் போன்று ஒரு சட்டத்தை உண்டாக்கித் தொழில் புரியாமல் சோம்பேறிகளாக இருப்பவர்களை நீதிமன்றத்தில் விசாரித்துத் தண்டிக்கவேண்டும்.

2. குடியேறுவதற்குப் போதிய நிலங்களிருக்க ஜனங்கள் நெருக்கமாய்ச் சீவிப்பதால் நிலங்களின் விலை அதிகரிப்பதன்றி அவைகள் பண்படுத்தப்படாமல் இருக்கின்றன. நீதிமன்றத்தில் விசாரித்துத் தண்டிக்கப்பட்டவர்களையும் அவர்களின் குடும்பங்களையும் குடியேற்றத்துக்கு அனுப்பவேண்டும் தங்கள் தங்கள் கிராமங்களை விட்டுப் பிரிய மனமில்லாமல் மலேரியாவையும் தண்ணீர்க்கஷ்டத்தையும் சிலர் சாட்டுகின்றார்கள். மலேரியா அணுகாமல் தடுப்பதற்கு ஒவ்வொருவரும் கொசுவலை, கம்பளிப் போர்வை, பேசன் ஆகியவைகளை வைத்துக்கொள்ளவேண்டும். வீட்டைச்சுற்றிவரத் துளசிமரங்களை உண்டாக்கினல் அவைகளின் மணத்துக்கு நுளம்புவராது மலேரியாச் சுரம் வந்தால் காலையில் கொஞ்சத் துளசியிலையைச் சாப்பிட்டுவந்தால் சுரம் நீங்குவதன்றி பாம்பு கடித்தாலும் விஷம் ஏறாது. அசுத்தமான ஜலமாக இருந்தால் ஒரு வெற்றுப் பீப்பாவை எடுத்து அதற்கு அடியில் நீர் ஓடுவதற்காக ஒரு சிறு துவாரத்தை உண்டாக்கிக் கால் பீப்பாவுக்கு பெரும் குறுணிக் கற்களைப் போடவேண்டும், மற்றக் கால் பீப்பாவுக்கு மிச்சம் சிறிய குறுணிக் கற்களைப் போடவேண்டும், மற்றக்கால் பீப்பாவுக்கு சுத்தமான வெண் மணலைப் போடவேண்டும். மற்ற அரைக் கால் பீப்பாவுக்கு எஞ்சின் கரியை (சீமைக் கரியை)ப் போட்டு அதற்குமேல் கொஞ்ச மணலைத் தூவி எவ்விதமான அசுத்தமுள்ள நீரை விட்டாலும் அது வடிந்து சுத்தமான ஜலமாகவும், மெல்லிய ஜலமாகவும் கிடைக்கும். இது பில்டரிலிருந்து, (Filter) வடியும் நீரிலும் பார்க்கத் திறமானதாக இருக்கும் இந்நீரைச் சூடாக்கிப் பருகிவந்தால் எவ்விதமான நோயும் அணுகாது.

3 மேகம் பார்த்த பூமியில் நெல் விதைப்பதில் பயனில்லையென்றும் தோட்டம் செய்யமுடியாதென்றும் சாக்குப் போக்குச் சொல்லிக்கொண்டு சோம்பேறிகளாகத் திரிவதால் களவும், கொலையும் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. இவைகளை அறவே ஒழிப்பதற்கு வயல் நிலங்கள் எவ்வளவு விஸ்தீரணமானதாயிருந்தாலும் அவைகளைப் பிரித்துப் பிரித்து வரம்பு கட்டவேண்டும். ஒவ்வொரு பிரிவிலுள்ள வரம்புக்கூடாக தண்ணீர் ஓடுவதற்கு மதவுபோன்று சிறு துவாரம் வைக்கவேண்டும். அதிக மழை வந்து வரம்புக்குமேல் பாயத்தொடங்கினல் இப்பலகைத் துண்டை எடுத்துவிட எல்லாநீரும் வெளியில் ஓடிவிடும். வெளியில் பாய்வதை, பெரும் வாய்க்கால்களை வெட்டி அதற்குள் விழச்செய்யவேண்டும். இதற்குள் விழுந்த நீரை கடலுக்குள்ளாவது அல்லது குளங்களுக்குள்ளாவது பாயச்செய்யவேண்டும். மழை இல்லாத காலத்தில், நெற்பயிர் செய்வதற்கு ஆறு, குளம், இல்லாதவிடங்களில் இருபது அல்லது முப்பது பரப்புக்கு ஒரு கிணறு மத்தியில் உண்டாக்கி, அதற்குப் பக்கத்தில் ஒரு பெரும் தொட்டியைக் கொங்கிறீற்றினல் சரிக்கட்டி, கைப்பம்பினல் நீரையெடுத்து நிரப்பியபின் ரப்பர் ரியூப் (Rubber tube) மூலமாக எங்கெங்கு தேவையோ அங்கங்கெல்லாம் பாய்ச்சலாம். தண்ணீர் குறைந்த கிணறாக இருந்தால் ஒவ்வொருநாளும் கொஞ்சக் கொஞ்சப் பகுதியாகப் பாய்ச்சலாம். கூலியாட்களின்றியும், செலவின்றியும், கஸ்டமின்றியும் தனிமையாகச் செய்யலாம். இவ்வாறு தோட்டக்காரர்களும் செய்து தேசத்தைச் செழிக்கச்செய்வதன்றி சந்தோஷமாக ஜீவிக்க ஏதுவாகும்.

4. யாழ்ப்பாணத் தரை, கடல்மட்டத்தில் இருப்பதால் மகாவலி கங்கையை யாழ்ப்பாணத்துக்குத் திருப்பிவிட்டால் வெள்ளப் பெருக்குக் காலத்தில் ஊரை அழித்துவிடுமென்று கூறுவாருமுளர். ஆனல், மகாவலி கங்கையை யாழ்ப்பாணத்துக்குத் திருப்பும்பொழுது அதிலிருந்து இரண்டு கிளைகளை மூல்லைத்தீவுப் பகுதிக்கும், மன்னார்ப் பகுதிக்கும் பிரித்துவிட்டால் அதன் பெருக்கும் வேகமும் குறைந்துவிடும். வேண்டுமானல் இடையில் தடையை யுண்டாக்கித் தடுக்கலாம். இதை வெட்டுவதற்கு அதிக கூலியாட்களும், ஆயுதங்களும் சிரமமும் இல்லாமல் செய்யலாம். நிலந்தோண்டிக் கப்பலை (Dredger) க்கொண்டு தோண்டி எடுக்கப்பட்ட மண்ணல் அணைபோடலாம். இவ்வாறு செய்யும்பொழுது தங்கம், வயிரமாகிய திரவியங்கள் கிடைத்தாலும் கிடைக்கும். கண்டிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் ஏறக்குறைய நூற்றி அறுபது மைல் தூரமாகயிருப்பதால் ஐந்து வருடத்துக்குள் தோண்டி முடிக்கலாம்.

(5) முக்காலத்திலே யாழ்ப்பாணத்தில் பருத்தி பயிரிடப்பட்டு வந்தது. பருத்தித்துறை மார்க்கமாக பல தேசங்களுக்கும் அனுப்பப்பட்டது. பருத்திவெய்யிலுள்ள இடங்களில் நல்லாய் உண்டாகின்றமையால் திரும்பவும் அத்தொழிலைச் செய்து துணிப்பஞ்சத்தை நீக்கிக்கொள்ளலாம் நீர் பாய்ச்சவேண்டுமானல் மேற் கூறியவாறு செய்யலாம்.

(6) முதல்முதல் சினி உற்பத்திச்சாலை யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்பட்டதை எல்லோரும் அறிவர். ஒருவன் தன்னுடைய நடத்தைப் பிசகினல் [illegible] துவிடுகின்றான்; [illegible] பனியின் அதிகாரிகள் நடத்தத் தெரியாமல் முறித்தனர். போதிய கருப்பநீர் யாழ்ப்பாணத்திலுண்டு. ஐக்கியசங்க முறையிலாவது கூட்டு முறையிலாவது. தனிமையிலாவது சீனியை உற்பத்தி செய்யலாம் பிறதேசங்களைக் காத்துக்கொண்டு இருக்கவேண்டியதில்லை.

(7) வீடு வேய்வதற்காக மலையாளத்திலிருந்து ஓடுகள் தருவிக்கின்றோம். இதையிட்டு எவ்வளவோ பணம் பிறதேசத்துக்குப் போகின்றது எம் பணம் பிறதேசத்துக்குப் போகாமல் எம்மூரிலுள்ள பசைப் பிடிப்பான செம்மண்ணினல் ஓடும் மற்றும் மண்பாண்டங்களும் செய்து நம்பணத்தை நாமே அனுபவிக்கலாம்.

(8) ஏறக்குறைய எல்லாத் தேசங்களிலும் இரும்பு உருக்கும் யந்திரசாலைகள் இருக்கின்றன. ஆனல் இலங்கையில் மாத்திரம் இந்த யந்திரசாலை கிடையாது. இச்சாலை இருக்குமாயின் பலவிதமான யந்திரங்களை உண்டாக்கிப் பொருள்களை விருத்திசெய்யலாம் இதை சீக்கிரத்தில்தாபிக்கவேண்டும்.

(9) எமது இரு வகுப்புத் தலைவர்களும் ஒலிபரப்பிக் கருவி மூலமாகப் பட்டினங்களிலும், கிராமங்களிலும் வசிப்பவர்களை ஒற்றுமையாகச் ஜீவிக்கச் செய்யவேண்டும். கொலையையும் களவையும் வியபிசாரத்தையும் விலக்கும்படி போதிக்கவேண்டும். வேலை செய்யாமல் சோம்பேறிகளாகத் திரிபவர்களைப் பட்டாளத்தில் சேர்த்துத் தேசத்தைக் காக்கும் போர்வீரராக்கவேண்டும்.

(10) பழக்க வழக்கமின்றி discipline கல்வி கற்றுக் கொடுப்பதில் பயனில்லை. [illegible] முன் எல்லா மா[illegible] பயிற்சித் திடலுக்கு அழைத்து பயிற்சி தொடங்குமுன் கொடியை ஏற்றி தேசியகீதம் பாடவேண்டும். இதற்குப்பின் தேகப்பயிற்சி குறித்த நேரத்துக்குச் செய்யவேண்டும். வகுப்புக்குப் போனபின் உபாத்தியாயர் முதன்முதல் நுழையும்போது எல்லா மாணவர்களும் எழும்பி வணக்கம் செய்யவேண்டும், இவ்வாறு செய்துவரின் தேசாபிமானம், தாழ்மை, ஒற்றுமையாகிய வைஉண்டாகுமன்றி கொலையும் களவும் அற்றுப்போகும்.

(11) யாழ்ப்பாணத்தில் கல்வியறிவுள்ள அநேக வயோதிபப் பெண்மணிகள் வசிக்கின்றனர். அவர்களில் சிலர் உபாத்தியாயினிகளாகவிருந்து இளைப்பாறி அரசாங்கத்திடமிருந்து சம்பளம்பெறுகின்றனர், சிலர் அனதைகளாக உதவியின்றி உண்ண உணவும உடுக்க வஸ்திரமும் இல்லாமல் தவிக்கின்றனர். இங்கு இந்து மகாசனசபையும், சங்கங்களும், வாசிகசாலைகளும் இருக்கின்றன. இவைகளுக்கு சமயாபிமானம் இருக்குமாயின் மேலே கூறிய பெண்மணிகளை சொற்ப வேதனத்தில் நியமித்து வீடுவீடாகச் சென்று, சமயத்தையும் ஆலய தரிசன விதிகளையும், ஆலயங்களில் நடக்கவேண்டிய முறைகளையும் போதிக்கச் செய்யலாம்.

மேற்கூறியவைகளை விட எமக்கு வேறொன்றும் தேவையில்லை இவைகளை எம் தலைவர்களும், பெரியோர்களும் ஐஸ்வரியவான்களும் செய்துவைப்பாராயின் அவர்களை நாமெல்லோரும் மதித்துப் போற்றி வருவோம். கந்தக்கடவுன் அப்பெரியார்களுக்கு நீடூழி வாழ்வையும் சகல சித்தியையும் கொடுப்பாராக.

எனது

# குருக்களையா அவர்கள்

யாழ்ப்பாணம் சுழிபுலை பிரமஸ்ரீ ச. பொன்னுசாமிக்குருக்களையா அவர்களின் மரணச்செய்தியை நேற்றுப் பகல்அறியலானேன்; அவர்களின் தொடர்பு எனக்கு 1913-ம் ஆண்டில் ஏற்பட்டது சைவாகமம் சம்பந்தமான நூல்களையும் திருக்கோவிலுக்கு வேண்டிய உபகரணங்களையும் வாங்கியனுப்பும்படி கேட்பார். வாங்கியனுப்புவேன். அவரை எனக்குமுதன்முதல் அறிமுகப்படுத்தியவர் அவர் சீடராகிய எனது நண்பர் மல்வம் க. அம்பலவாணராகும். கடிதமூலமாக உண்டான தொடர்பு நாளுக்குநாள் முதிர்ந்து வந்தது. 1944—ம் ஆண்டில் யான் யாழ்ப்பாணத்திற்குச் சென்றபோது அவர்களைத் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றேன் நல்லூர்க் காசணசபிள்ளையார் கோயிலில் அவர்களைச் சந்தித்தேன். அவர்கள் எனக்குச் செய்த உபசாரங்கள் இன்னும் எனது மனக்கண்ணின்முன் நிற்கின்றன. எக்காரணத்தினலோ அப்பெரியார் என்னிடத்துப் பேரன்பு காட்டிவந்தனர். அவ்வன்பிற்கு அறிகுறியாக எனக்கு அடிக்கடிகடிதம் எழுதிக்கொண்டே இருப்பார்கள். எங்கள் பரஸ்பர விசுவாசத்திற்குக் காரணம் பூர்வஜென்மத் தொடர்பு போலுமென்று அவர்களே ஒருதரம் தெரிவித்தார்கள். அவர்கள் எழுதிய கடிதத்திற்கு உடனே பதில் எழுதாவிடின் கவலையுடன் மற்றொரு கடிதம் எழுதுவார்கள். அவர்களை யான் தந்தையாகவும் குருவாகவும் பாவித்துவந்தேன். எனக்கு எழுதும் கடிதங்களில் அவர்கள் என்னை "மகா வித்வான்", "வித்வசிரோமணி" என்று குறிப்பிடுவார்கள். அவ்வடைமொழிகளுக்கு யான் சிறிதும் அருகனல்லேனென்று மறுத்தேன். அவர்கள் பின்வருஞ் சமாதானங் கூறினர்: "தங்களருமை தங்களுக்கேதெரியாது தங்களுடைய கல்வியறிவு, தெய்வபக்தி, சுத்த இருதயம் ஆகிய இவைகள் எவரிடமிருக்கின்றன. தங்களை வித்துவானெனப் பலகால் சொன்னலும் தகாது." இக்கூற்றுகளால் அப்பெரியார் நாயினுங் கடையேனுகிய என்மாட்டு வைத்திருந்த அன்பின் பெருக்கு ஒருவாறு புலப்படும் இத்தகைய பெரியாரின் இணக்கம் எனக்குக் கிடைத்தது யான் முன்செய்த புண்ணியம்போலும், அவ்விணக்கம் நீடித்து நிற்காமல் 5 ஆண்டுகளோடு முடிவுபெற்றதற்குப் பெரிதும் வருந்துகின்றேன்.

குருக்களையா அவர்கள் தமிழ்நூற் பயிற்சியும் வடமொழி ஆகம விற்பத்தியும் ஒருங்கே அமையப்பெற்றவர். சோதிடம், வைத்தியம் முதலிய துறைகளிலும் வல்லவர். இந்துசாதனம், சுதேசநாட்டியம், முதலிய பத்திரிகைகளில் பல ஆண்டுகளாகச் சைவசாத்திர விஷயமாகவும், சோதிட வைத்திய விஷயமாகவும் பல கட்டுரைகளை அவ்வப்போது எழுதுவது எல்லோரும் அறிந்ததே; சைவசம்பந்தமான நூல்களை வாங்கிப் படிப்பதில் பேராவலுடையவர். த. கைலாசபிள்ளையவர்கள்முதலிய பழைய வைதிக சைவப் பெரியோர்களால் நன்குமதிக்கப்பெற்றவர். அவர்கள் கைலாசப்பிள்ளையார் கோயிலின் வருடஉற்சவாதிகளைச் செவ்வனே நடாத்துபவர். சிவபத்தி அடியார் பத்தியிற் சிறந்தவர் இவருடைய சிவவேடப் பொலிவு எவரையுங் கவரத்தக்கது. சாமானியகுருக்கள்மாரைப்போல் பணவாசை சிறிதும் இல்லாதவர். தாம் நோய்வாய்ப்பட்டு வருந்தும்போதும் என்னை மறவாது தம்கைப்பட நடுக்கத்தோடு எனக்கு இம்மாதம் 6ந் தேதி ஓர் கடிதம் எழுதியவர். அக்கடிதத்தில் அவர் செய்துகொண்ட வேண்டுகோளாவது "இந்துசாதனத்தில் பண்டிதர் சம்பந்தரைப்பற்றித் தாங்கள் எழுதியகட்டுரையைக் கண்டேன் அம்மாதிரி எனக்குமொன்று சாதனத்தில் தீட்டிவிடுங்கள்" இதனல் தாம் பிழைப்பது கடினம் என்றும் அவர் இறந்தபின் யானவரைப்பற்றி எழுத நேரிடுமென்றும் அவர்கள் எண்ணினார்கள்போலும். அவர்களது வேண்டுகோளுக்கு இசைந்தே இக்கட்டுரையை யான் எழுதலானேன். அப்பெரியாரின் பிரிவாற்றாமையால் யான் எனது சொந்தத் தந்தையாரை இழந்ததுபோல் வருந்துகின்றேன். எனது ஆப்தநண்பர்களை ஒவ்வொருவராக இழக்கலானேன்.

தந்தையார் போயினார்தாயரும் போயினார்
தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார்
பார்க்கின்றார் கொண்டுபோவார்
எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியா
லேழைநெஞ்சே
அந்தணா ரூர்தொழு துய்யலா மையல்
கொண் டஞ்சல்நெஞ்சே.

என்னுந் தேவாரத்தைச் சிந்தித்து எமது துக்கத்தை மாற்றுவோமாக,

திரு. சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை
15—1—48

வியாபாரத்திற்கழகு
விளம்பரஞ் செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2 ம்பக்கத் தொடர்ச்சி

எந்தநேரமுஞ் சிந்தித்துப் பரஸ்பரம் கவலைப்படுகிருர்கள் ….. ….." என்று இப்படிப் புரோகிதர் சொல்லி முடிப்பதற்கிடையில், அந்த இடத்தில் நின்ற சிவபாக்கியம் மெல்ல நழுவி, தன்னை அவர்கள் பாராதவண்ணம், ஆனுற் புரோகிதர் சொல்லும் பலன் தனக்குக் கேட்கத்தக்கதாகிய ஒரு மறைவான இடத்தில் நின்ருள் பின்னரும் புரோகிதர். "நீங்கள் கவலைப்படவேண்டாம்; இ·ருவருக்குமுள்ள சில நிக்கிரகங்கள் இவர்களை இவ்வளவு காலமும் இவர்களுடைய மங்கலகருமம் நிறைவேறவொட்டாது இவர்களைப் பிரித்து வைத்திருக்கின்றன; இவர்களிருவரும் ஒருவரையொருவர் கண்டுங் காணுதவர் போல் இருக்கிருர்கள்; நீங்கள் இந்தப் பெண்ணுக்கு முந்தியே நியமித்துவைத்த சொந்த மாப்பிள்ளை தாம் வந்து சேர்வார்; "ஆங்காலம் மெய்வருந்தவேண்டாம் அந்த நேரம் ஏதோ, எம்மையும் மறந்துவிடாதீர்கள்" என்று முகமலர்ச்சியோடு கூறினர்; கேட்டவர்களும் பெரும் ஆநந்தமடைந்தார்கள்; "சாமீ, ஆரை மறந்தாலும் உங்களை மறப்போமோ; நீங்கள்தாம் எங்கள் பிள்ளைக்கு நல்ல கருமம் நடக்கும்போது நிறைவேற்றி வைக்கவேண்டும்" என்ருள் கண்ணகியம்மை; புரோகிதருக்கு ஆகவேண்டிய சன்மானஞ் செய்து விடைகொடுத் தனுப்பினர்கள் விஜயரத்தினமும் பாக்கியலட்சுமியும். பின்னருஞ் சிலநாள் அங்கே தங்கியிருந்து, விஜயரத்தினம் பாக்கியலட்சுமி தனபாக்கியமென்னு மிவர்களிடத்தில் விடை பெற்றுக்கொண்டு தாயும் மக்களும் தங்கள் வாசஸ்தானத்திற்கு மீண்டனர்.

### "பொருந்துவன போமினென்ருற் போகா"

சிவகுருநாதன் முதலியோர் தங்கள் வாசஸ்தானத்திற்கு மீண்டு ஒரு வாரஞ் சென்றபின் ஒருநாள் சிவகுருநாதன் தன் உத்தியோகத்தானத்திற் கடமை பார்த்துவிட்டு மீண்டு வரும்போது வெகு ஆநந்தத்துடன் கூடியவனுய் ஒரு கடிதத்தைத் தன் சகோதரி கையிற் கொடுத்து, தாயையுந் தங்கையையும் நோக்கி "அம்மா, தங்காய், எங்களை நீடித்தாட்டிபிடித்த கவலையெல்லாம் இன்றோடு அறவே தொலைந்துவிட்டன. தங்கைச்சி உந்தக் கடிதத்தைப் படித்துப்பாரம்மா" எனலும் தங்கையும் முகமலர்ந்து அக்கடிதத்தைத் திறந்து பார்த்தாள்; ஒன்று சிவகுருநாதனுக்கு விஜயரத்தினமெழுதியதாகும்; அதற்குளுள்ள மற்றது சிவபாக்கியத்திற்குப் பாக்கியலட்சுமி எழுதிய கடிதமாகும்; அதனை ஆவலோடு பார்த்தாள் கண்ணகியம்மை கடிதத்திலுள்ள செய்தியையறியவேண்டுமென்ற பேராவலோடு நின்ருள்; சிவபாக்கியம் அக்கடிதத்தின் முதற்பகுதியைத் தாயும் தமயனும் கேட்கும்வண்ணம் படித்தவள், இடையில் மெல்லவாசித்து அப்பால் வாசிக்காதவளாய், "அம்மா, எல்லா விஷயத்தையும் எங்கள் அண்ணனிடம் கேட்டறியுங்கள்" என்று சொல்லிவிட்டுத் தன அறையுட்சென்று கடிதத்தை ஆநந்தமீதூர ஒருமுறை இருமுறை மும்முறை ஆர்வத்தோடு வாசித்தாள்; இதற்கிடையிற் சிவகுருநாதன் அக்கடிதங்களிலுள்ள சாரத்தைத் தங்கள்தாய்க்குச் சொல்ல அவள் அப்பிள்ளைகளைப் பெற்றகாலங்களில் அடைந்த உவகையைக்காட்டிலும் பன்மடங்குஉவகையடைந்தாள்; "ஆண்டவன் எங்களைக் கைவிடமாட்டான்" என்று சொல்லி மகிழ்ச்சி பொங்க, இறைவனைச் சிந்தித்து மேலே நோக்கித் தொழுதாள்; சிவபாக்கியமும அக்கடிதத்தைப் படித்த பின் தன் மார்பிலுள்ள உடையுட் சொருகி வைத்துக்கொண்டு தங்கள் தாயும தமயனும் நிற்குமிடத்திற்குச் சிந்தை களிகூர வந்தாள்; "மகளே, நீ தெய்வத்தைக் கைவிடுத்த பலன் வீண்போகவில்லை' என்ருள் தாய்; "அம்மா, வருந்தியழைத்தாலும் வாராத வாரா—பொருந்துவன போமினென்ருற் போகா'; கருப்பத்திற் குழவியிருக்கும்போதே அக்குழந்தை பிறந்தவுடன் குடிக்கும்வண்ணம்தாயிடத்திற் பால் சுரக்கும்படியமைக்கும் இறைவன் எல்லாவுயிர்கட்கும் ஆகவேண்டியன செய்து காத்தருள் புரிவாரம்மா" என்று சிவகுருநாதன் சொன்னான். (வரும்)

## மரியாதையாக நடவுங்கள்

### டக்ரர்மாருக்கு அதிகாரியின் கட்டளை

சுகாதார வைத்தியப்பகுதி அதிகாரியான டக்ரர் எஸ். எவ். செல்லப்பா, தம்கீழ் உள்ள சகல டக்ரர் மாருக்கும ஓர் சுற்றுநிருபம் விடுத்திருக்கிருர். அரசாங்க உத்தியோகத்திலே டக்ரர்மாராகக் கடமை பார்ப்பவர்கள், பொதுஜன ஊழியரே என்ற உண்மையை அவர்கள் கைக்கொள்ளவேண்டுமென்றும், பொதுஜனங்கள் விஷயத்தில் கண்ணியமாகவும் மரியாதையாகவும் நடக்க வேண்டியது அவர்கள் கடமையென்றும் டக்ரர் செல்லப்பா அச்சுற்றுநிருபத்திற் குறிப்பிட்டிருக்கிருர். அரசாங்க வைத்திய நிலையங்களில் பொதுஜனங்கள் வந்தால் அவர்களை நடாத்தும் திருப்தியீனமான முறைபற்றித் தமக்குப் பலவிதமான முறைப்பாடுகள் வந்திருக்கின்றன என்று அச்சுற்றுநிருபத்தில் டக்ரர் செல்லப்பா குறிப்பிட்டு மேலும் கூறுவதாவது:-

'ஆஸ்பத்திரிகளுக்கு ஊரவர்கள் வந்தால் அவர்களை நடத்தும் முறைபற்றி எனக்குப்பலவிதமான முறைப்பாடுகள் வந்திருக்கின்றன. ஆஸ்பத்திரிகளில் உத்தியோகம் வகிப்பவர்கள் ஊரவர்களுடன் மரியாதையாக ஊடாடுவதில்லை என்பது அம்முறைப்பாடுகளில் ஒன்று. இன்னும் வைத்திய நிலையங்களுக்குக் கொண்டுவரப்படும் நோயாளிகளைக் கவனித்து உடன் சிகிச்சை அளிக்கப்படுவதில்லை என்பதும் இன்னேர் முறைப்பாடு. பணம் கொடுப்பவர்கள் விஷயத்தில்தான் கூடிய சிரத்தையும் கவனமும் எடுக்கப்படுகிறதென்றும் இன்னேர் முறைப்பாடும் வந்திருக்கின்றது.

"நாங்கள் எல்லாரும் பொதுஜன ஊழியர்; ஆகவே பொதுஜனங்கள் விஷயத்தில் நாங்கள் மரியாதையாகவும் கண்ணியமாகவும் நடக்க வேண்டும். இதற்குமுன் பொதுஜனங்களுக்கு வைத்தியவிஷயமாகச் சிறந்த சேவை செய்யப்படாதிருக்கலாம் அதற்காக அந்தப் பழைய முறையையே நாங்கள் இனியும் பின்பற்றுவது முறையாகாது."

## விவாகம்

### காசிப்பிள்ளை—பாலாம்பிகை

சென்ற ஞாயிற்றுக்கிழமை (18-1-48) இரவு 11 மணியளவில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் யாழ்ப்பாணம்இந்துக் கல்லூரித் தமிழ் உபாத்தியாயர்களுளொருவராகிய வண்மேற்கு திரு. க. காசிப்பிள்ளைக்கும் வேலணை மேற்கு திரு. வை. கந்தையா அவர்களின் புதல்வி திருவளர்செல்வி பாலாம்பிகையம்மாளுக்கும், மணமகளில்லத்தில் விவாகம் சிறப்பாக இனிதுநிறைவெய்தியது. தம்பதிகள் சகலஐசுவரியங்களையும்பெற்று இன்புற்று இனிது வாழ்வார்களாக.

## சிங்கக்கொடிதான்

### சுதந்திர தினத்தில் உயர்த்தப்படும்

எவர் எப்படிக் கூறியபோதிலும், வாளேந்திய சிங்கக்கொடியையே, சுதந்திரதினக் கொண்டாட்டத்தின்போது அரசாங்கக் கட்டிடங்கள்மீது ஆரோகணிக்க அரசாங்கம் நிச்சயித்திருக்கிறதென்று சென்ற திங்கட்கிழமை, உள்நாட்டு மந்திரி சேர். ஒலிவர் குணத்திலகா செனெற்சபையிற் கூறினர் டக்ரர் ஈ. எம். வீ. நாகநாதன் இலங்கையில் வாழும் சகல சாதியத்தாருக்கும் ஏற்ற ஓர் தேசியக்கொடியையே நிர்மாணிக்க வேண்டும் என்று எடுத்தாண்ட நிர்மானத்தின் விவாதசுகின்போதே சேர் ஒலிவர் இப்படிக் கூறினர்.

டக்ரர் நாகநாதனுடைய பிரேரணைக்கு ஆதரவாக ஸ்ரீமான்கள் வி குமாரசுவாமி, எஸ் நடேசன், பெரிசுந்தரம், டக்ரர் நாகநாதன் என்னும் நால்வருமே வாக்களித்தனர் எதிராக 18 பேர் வாக்களித்தனர், ஆகவே தீர்மானம் தோல்வியடைந்தது.

## குருபூசை

### ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள்

நிகழும் சர்வசித்து ஆண்டு தை மாதம் 17ந் திகதி (30-1-48) வெள்ளிக்கிழமை கொட்டடி நமசிவாய வித்தியாசாலையில் சங்கீத அபிமானிகளால் மேற்படி விழா கொண்டாடப்படும்.

## விவாகம்.

### பொன்னம்பலம்—கமலாதேவி

நிகழும் சர்வசித்து வருடம் தை மாதம் ௧0உ (3-1-48) வெள்ளிக்கிழமை (இறைத்தினம்) மத்தியானத்தின்மேல் 1 மணி 18 நிமிடம் வரை கொழும்பு புதிய செட்டித் தெரு 35-ம் இலக்க இல்லத்தில் வசிக்கும (வட்டுநகர் வாசியாகிய) ஸ்ரீ பொன்னம்பலம் முத்தையா அவர்களின் இரண்டாம் புதல்வன் திருவளர் செல்வன் பொன்னம்பலம் அவர்களுக்கும், மருதானை டீன்ஸ்றோட், பவுனரின்ஹவுஸ்லேன் 6-ம் இலக்க இல்லத்தில் வசிக்கும், (சித்தங்கேணி) ஸ்ரீ பொன்னம்பலம் தம்பிமுத்து அவர்களின் இரண்டாம் புதல்வி திருவளர் செல்வி கமலாதேவிக்கும் மணமகள் இல்லத்திலேயே விவாகம் இனிது நிறைவேறிற்று தம்பதிகள் அட்ட ஐசுவரியங்களையும் பெற்று இன்புற்று இனிதுவாழும்வண்ணம் எல்லாம்வல்ல இறைவன் திருவருள் முன்னிற்பதாக.

## பிரதிநிதிக்கு ஊரவர்களின் பரிசு

மொட்டுவைத் தொகுதிப் பிரதிநிதி திரு. சோமவீர சந்திரசிரிக்கு அத்தொகுதி மக்கள் ஒருமோட்டார் காரைப் பரிசாக அளித்துள்ளனர்.

திரு. எம். ஈ. வ. கூரே தலைமையில் பிலியந்தலாவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இப்பரிசு அவருக்கு வழங்கப்பட்டது. இக்கூட்டத்தில் திரு. எஸ். சந்திரசிரி பேசுகையில் இப்பரிசு தமக்கு தம்முடைய தொகுதியில் ஆற்றவேண்டிய சேவைகளுக்குப் பெரிதும் உதவுமென்றும், குடியேற்ற நாடுகளின் நிதியிலிருந்து அரசாங்கம் பிரதம மந்திரிக்கு அளித்த பரிசிலும் பார்க்க உள்ளன்போடு தாமாகவே ஏழைகளும் பணக்காரர்களுமாக உதவிய நன்கொடைகள்மூலம் தமக்கு அளிக்கப்பட்ட பரிசு ஒப்புவமையற்றதென்றும் கூறினர், இக்கூட்டத்திலே பலர் பேசினர்கள்.

## சிங்கக்கொடியும் தகநாயக்காவும்

### "அதனைக் கடைசிவரை எதிர்ப்பேன்"

காலி மின்னரத்- தொழிலாளர் சங்கக் கூட்டம் சென்ற திங்கட்கிழமை கூடியபோது, பாராளுமன்றப் பிரதிநிதி மிஸ்ரர் தகநாயக்கா அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்து சிங்கக்கொடிப்பிரச்னை சம்பந்தமாகவும் குறிப்பிட்டார். அவர் அதுவிஷயமாகப் பின்வரும் கருத்துப்படக் கூறினர்.

'மட்டக்களப்புப் பிரதிநிதி ஜனுப் சின்னலெப்பை கொண்டுவந்துள்ள சிங்கக்கொடித் தீர்மானத்துக்கு எதிராகவே நான் வாக்களிப்பேன். இவ்விஷயமாக என்னை வெருட்டி அநாமதேயக் கடிதங்களும் வந்திருக்கின்றன. இந்த வெருட்டுகளுக்கெல்லாம் நான் அஞ்சுபவனல்ல; வேண்டுமென்ருல் இங்கே ஓர் ஐ. தே. க அபேட்சகர் இத்தொகுதிக்கு முன்வரட்டும். நான் என் பதவியை விட்டு விலகி மீண்டும் இந்தக் கொடிப் பிரச்னையிற் போட்டியிடத் தயார்.

## கிராம பாதுகாப்புச்சங்கம்

கரம்பன் சிவகுருநாத வித்தியாசாலை மண்டபத்தில், திரு. க. சபாபதிப்பிள்ளை தலைமையில் கிராம பாதுகாப்புச் சங்கத்தின் கூட்டமொன்று 11-ம் தேதி மாலை நடைபெற்றது. பொதுக் கூட்டத்தில் சபையின் நிர்வாகசபையினர் தெரிவு செய்யப்பட்டனர்; கிராமத்தில் குற்ற பகிஷ்கார சங்கமாக இது தொண்டாற்றிவருகிறது. சபையின் தலைவராக திரு. க. சபாபதிப்பிள்ளையும், உபதலைவர்களாக திருவாளர்கள் டி. பி ரூசைப்பிள்ளை, சு. இராமசாமி, ஆகியோரும் காரியதரிசியாக திரு, சு. கனகசபையும், தனதிகாரியாக திரு. அ. வ. தம்பிப்பிள்ளையும் மற்றும் நிருவாகசபையினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## நோட்டு விற்பனவு விளம்பரம்

வட்டுக்கோட்டை கிழக்கு காலஞ்சென்ற தம்பையா வயித்திலிங்கத்தின் தத்துவ வழக்கு

வட்டுக்கோட்டை கிழக்கு தம்பையா வயித்திலிங்கம் கைம்பெண் பொன்னம்மா தத்துவகாரி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 486 ம தத்துவ இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும இரண்டு துண்டுக் காணிகளை 1948 ம் ஆண்டு மாசி மீ 14 ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4, 4½ மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

1 வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று வட்டுக்கோட்டை மேற்குஇறை பொக்கறைப்பிட்டி நிலப்பரப்பு 6 1/8எல்லைகிழக்குஒழுங்கை.வடக்கு,பெருமையினர்ஆறுமுகத்தின் உருமைக்காறருக்குரிய ஆதனங்கள். மேற்கு, வயிரமுத்துசெல்லத்துரைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள். தெற்கு அம்பலவாணருக்குரிய ஆதனம். இதடங்கலும் விற்கப்படும்.

(2) வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று வட்டுக்கோட்டை மேற்கு இறைபாலைத்தாழ்வு நெற்பரப்பு 12¾ எல்லை: கிழக்கு, வயிரமுத்து ஆறுமுகத்துக்குரிய ஆதனம். வடக்கு, வாய்க்கால், மேற்கு, அருணசலம் நமசிவாயத்துக்குரியஆதனம், தெற்கு அருணசலம்நமசிவாயத்துக்கும் பங்காளருக்கு முரியஆதனங்கள். இதடங்கலும் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்
கொம்மிஷனர்

வட்டுக்கோட்டை கிழக்கு, 12-1-48
M 233 23-1-48

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நாவலர் பதிப்பு நூல்கள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவல ரவர்கள் பதிப்புப் புத்தகங்களை, வட இலங்கை முழுவதற்கும் வருவித்து விற்கும் உரிமை யாழ்பாணம் சைவ பரிபாலனசபை மனேஜருக்கு இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கின்றது; புத்தகங்கள் விரைவில் வந்துசேரும், வந்து சேர்ந்தவுடன் இப் பத்திரிகை வாயிலாகத் தெரிவிக்கப்படும்.

வண்ணார்பண்ணை
16—1—48

மனேஜர்
யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலை



## நாதன்ஸ் பிரசுரம்

மலேயாவுக்குச் சகல வசதிகளுமடங்கிய
பிரயாணக் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது
யாழ்ப்பாணம் - சென்னை - பினங் ரூபா 170
,, நாகபட்டணம் 115
யாழ்ப்பாணமிருந்து சென்னைவரை றெயில் இரண்டாம் வகுப்பு
அன்றேல் ஆகாயவிமானத்தில் உல்லாசப் பிரயாணம்
கபபலில் டெக் உட்படக் கட்டணம் ரூபா 190

**எஸ். ஆர். எஸ். நாதன்**
21/3, ஸ்ரான்லி ரேட் :: யாழ்ப்பாணம்
எங்கள் கிளைஸ்தாபனங்கள்: சென்னபட்டணம், நாகபட்டணம்,
சிங்கப்பூர், கொழும்பு முதலியவிடங்களி லுண்டு
Std 22. 6-6-47—6-6-48



## திருவருட்பயன்

சைவத்திருவாளர் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் (B.A.)
இயற்றிய விரிவுரையோடு கூடியது. தமிழ் ஆங்கில
எஸ். எஸ். ஸீ. வகுப்புகளுக்குச் சமய பாடமாக
விதிக்கப்பட்டது. புதுக்கிய பதிப்பு
விலை சதம் 75 ( அணு 12 )

## சைவபோதம் (முதற் புத்தகம்)

மேற்படி ஆசிரியர் எழுதியது
13-ம் பதிப்பு; விலைசதம் 50 ( அணு 8 )
யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலையிலும்,
பிரபல புத்தகசாலைகளிலும் பெறலாகும்

**மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை**
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்



## இலக்கிய வாசகம்

மூன்றும் புத்தகம்
நான்காந்தரத்துப் பிள்ளைகட்கு உபபாடமாகவுள்ளது
(புதுக்கிய இரண்டாம் பதிப்பு)

இதன் வசனபாகம்
சத்தியவிரதம்பூண்ட அரிச்சந்திரமகாராசனுடைய வரலாறு இலகுவான இனிய செந்தமிழ்வசனநடையில் 18பாடங்களாக வகுத்தெழுதப்பட்டுளது

செய்யுட் பாகம்
பஞ்சதந்திரத்தில் காக்கை ஒட்டகத்தை வஞ்சித்த கதைச்செய்யுள் நீதிக் கவித் திரட்டு, சதகத் திரட்டு என்னு மிவைகள் அடங்கி யுள்ளன.

பிரதியின் ஈற்றில் அரும்பத விளக்கம், செய்யுட் பாடவுரை என்னுமிவைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

பிரதி ஒன்று விலை சதம் 60 (அணு 10)
இங்குள்ள பிரபல புத்தகசாலைகளிலும் பெறற்பாலன

**மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை**
யாழ்ப்பாணம்



வியாபாரத்திற் கழகு விளம்பரஞ் செய்தல்



# இலங்கைவங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி
சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

**இலஙகை அரசாங்கத்தின் வங்கிக்காரர்**

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸற் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிளேஸ வங்கி.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்), வதுளை
யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242,ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை குருணாக்கல், வதுளை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக் கூடிய "செக்"குகள்கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜேண்டு,

( Std.29 1-8—30-7-48)



## பசந்த லேகியம்

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப்பலம், உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:
**க. ஆறுமுகம்பிள்ளை**
சி. 156, செக்கடித்தெரு கொழும்பு
Std. 1. 26—3—47 to 1—4—48



## தந்தரோக சஞ்சீவி
### கந்தசாமி வைத்தியர்
### சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீசம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும் முரசுவளரும், வாய்ப் புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப்பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:
ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை
Std 25 1-7-46—30-6-48 ( வெ )


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.


Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna. on Friday, January 23, 1948



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org